சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 122/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | ஜான்சிராணி |
| கணவர் பெயர் | : | ஆசைதம்பி |
| கிராமம் | : | மணக்கால் அய்யம்பேட்டை |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| வயது | : | 32 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். அ.சா-1 எனது மாமனார் ஆவார். 1 ம் எதிரி வீட்டிற்கு அருகாமையில் எனது மாமனாருக்கு சொந்தமான இடம் உள்ளது. அதில் 2024 ஆம் வருடம் கூரை வீடு கட்டி அதில் நானும் என் கணவரும் குடியிருந்து

வருகிறோம். எனக்கு 2 குழந்தைகள் உள்ளன. எனது வீட்டிற்கு கிழக்கு புறமாக ஒரு காலி மனை உள்ளது. அதனை அடுத்து எனது மாமனார் வீடு உள்ளது. எனது எனது வீட்டிற்கு மேற்கு புறமாக 1ம் எதிரியின் வீடு உள்ளது. நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு 1ம் எதிரியின் வீட்டிலிருந்து மின்சாரம் எடுத்து ஒரு விளக்கு மட்டும் போட்டு பயன்படுத்தி வந்தோம். நான் பறையன் சாதியை சேர்ந்தவள் ஆவேன். எதிரிகள் வேறு சமூகத்தை சேர்ந்தர்கள் ஆவார். இருப்பினும் ஒற்றுமையாக தான் இருந்து வந்தோம். கடந்த 28.05.2025 ஆம் தேதி நாங்கள் குடியிருந்து வரும் தெருவிற்கு சர்வேயர் ஒருவர் இடத்தை அளக்க வந்தார். அப்போது 1ம் எதிரியின் தம்பி திருஞானம் என்பவர் இடத்தை அளக்க சர்வேயரை அழைத்து வந்திருந்தாக சொன்னார். நானும் அங்கு இருந்தேன். இடத்தை அளக்க வரும் போது 1ம் எதிரியின் இடம் நான் குடியிருந்து வரும் இடத்திற்குள் வருவதாக சர்வேயர் தெரிவித்ததாக சொல்லி எங்களிடம் பிரச்சனை செய்தார்கள். மேலும் அந்த இடத்திற்கு எல்லையை காண்பித்து குச்சி எடுத்துக்கொண்டு எனது இடத்திற்கு வந்துவிட்டார்கள். அப்போது சர்வேயருடன் இந்த எதிரிகள் 4 பேரும் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியும் வந்திருந்தார்கள். அப்போது எனது கணவர் ஆசைத்தம்பியும் எனது மாமனார் செல்வராஜ் என்பவரும் குச்சி அடிக்க கூடாது என்று சொல்லி வெளியே அனுப்பி விட்டார்கள். அன்று இரவே 1ம் எதிரி அவரது வீட்டில் இருந்து கொடுத்திருந்த மின் இணைப்பை துண்டித்துவிட்டார். மறு நாள் 1ம் எதிரி அவரது வீட்டிற்குள்ளாக அவரது தம்பி குமார் எப்படி இந்த இடத்தை என் மாமனாருக்கு விற்பனை செய்தார் என்று பேசிக்கொண்டார்கள். பின்னர் கடந்த 04.06.2025 ஆம் தேதி எனது கொழுந்தனாருக்கு பெண் பார்ப்பதற்காக நானும் எனது உறவினர்களும் சென்றோம். வேன் கிளம்பி நான்கு வீடு தாண்டி சென்றவுடன் வீடு எரிகிறது என்று சத்தம் போட்டார்கள். நாங்கள் வேனை நிறுத்திவிட்டு என்ன என்று பார்ப்பதற்காக வேனை விட்டு இறங்கி வந்து பார்த்தோம். எனது கூரை வீடு எரிந்து கொண்டிருந்தது. எங்கள் தெருவில் உள்ளவர்கள் எங்களது வீட்டை அனைத்தார்கள். இருந்தபோதும் தீயனைப்பு துறைக்கு போன் செய்து வரவழைத்தார்கள். தீயனைப்பு வாகனம் வந்துவிட்டது. தீ முழுமையாக அனைந்தபின்னர் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வீட்டிற்குள் இருந்த பிரோ,

கட்டில், டிவி, நான் படித்த சான்றிதழ்கள் அனைத்தும் எரிந்து விட்டது. 5 பவுன் நகை உறுகி போய் இருந்தது அதை நான் எடுத்துக்கொண்டேன். மேலும் மடிக்கணிணி, கட்டில் மெத்தை, மர பிரோல் அதில் இருந்த துணிமணிகள், முடி வெட்டும் இயந்திரம் அனைத்தும் எரிந்து கருகி போய்விட்டது. மற்றும் பித்தளை பாத்திரங்கள் உறுகி போய்விட்டது. மொத்தம் எரிந்து போன பொருட்களின் மதிப்பி ரூ.5,00,000/- இருக்கும். வழக்கு சம்மந்தமாக அ.சா-1 ஆன என் மாமனார் போலீசாரிடம் சென்று புகார் கொடுத்தார். மாறுநாள் 05.06.2025 ஆம் தேதி என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.19 18:20:28 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.